## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.

## CC. No. 07/2017

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10–ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி–8(PW–8 )**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **கலியமூர்த்தி** | தொழில் | | **உதவி ஆய்வாளர் ஓய்வு** |
| த/பெ. | : | **மாரியப்பன்** | **ஊர்** | | **கந்தர்வக்கோட்டை** |
| வயது | : | 69 | மாவட்டம் | | **புதுக்கோட்டை** |

**10.10.2025**

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 4 வது எதிரி இறப்பு.**

**முதல் விசாரணை:**

1. நான் இறுதியாக செங்கிப்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன்.

2. கடந்த 30.11.2014 ஆம் தேதி பூதலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக நான் பணிபுரிந்தபோது, சித்திரைக்குடியை சேர்ந்த இராமமூர்த்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப காவல் நிலைய குற்ற எண்.195/2014, ச/பி. 341, 294(b). 324, 506(1) இதச கீழ் வழக்கு பதிவுசெய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ–5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** முதல் தகவல் அறிக்கையின் அசலை வாதியின் புகாருடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

3. அன்றையதினமே நான் வழக்கினை புலன் விசாரணணைக்கு எடுத்துக்கொண்டு 17.00 மணிக்கு சம்பவம் இடத்திற்கு சென்று சாட்சிகள் பாண்டித்துரை மற்றும் சின்னத்துரை ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செயது சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

4. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 மற்றும் மகஜர் சாட்சிகளையும் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரிகளை தேடி வந்த நிலையில், எதிரிகள் முன் பிணை பெற்றதை தெரிந்துகொண்டேன். காயம்பட் நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் திரு.ரவிசந்திரன், திரு.மாரிமுத்து மற்றும் திரு.சம்பத் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவ ஆவணங்கள் பெற்றேன் **(கோபிநாத், இராஜேஸ்வரி, ஆகியோரின் விபத்து பதிவேடு முறையே அ.சா.ஆ.7, 8 ஆகவும் இராமமூர்த்தின் விபத்து பதிவேடுடனா காயச்சான்று அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இத்துடன்

பணிமாறுதலாகி சென்றதால் வழக்கு கோப்பை காவல் நிலையம் வசம் ஒப்படைத்தேன்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) 30.11.2014 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு நடந்த வழக்கு சம்பவத்திற்கு மாலை 03.00 மணிக்கு தான் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அளிக்கை 01.12.2014 ஆம் தேதி தான் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே 3 கிலோமீட்டர் தூரம் உள்ளது. 5 முதல் 10 நிமிடத்திற்குள் சம்பவயிடத்தில் இருந்து காவல் நிலையம் வந்து விடலாம் என்றால் 15 நிமிடம் ஆகும். வாதிக்கு கொடுத்ததாக சொல்லும் மெடிக்கல் மெமோவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) அ.சா.1 கொடுத்த புகாரில் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் எங்கு யாரால் எழுதப்பட்டது என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் புகார்தாரரே கொண்டுவந்து கொடுத்தார். அ.சா.1 யை 30.11.2014 ஆம் தேதி மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். நேரம் ஞாபகம் இல்லை. அ.சா.1ல் கொடுத்த புகாரில் சம்பவம் பற்றி யார்யாருக்கு தெரியும் என குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். தான் மெயின்ரோட்டில் குடியிருப்பதாக அ.சா.1 எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

3) மாதிரி வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ள மெயின் ரோட்டில் அ.சா.1 வீடு இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், அவர் சந்தில் குடியிருக்கிறார். தான் மட்டும்தான் மரக்கண்று நட்டுக்கொண்டிருந்ததாக அ.சா.1 தனது புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். தன்னையோ, தனது குடும்பத்தாரையோ, யாரும் வழிமறித்தாகவோ அசிங்கமாக திட்டியதாகவோ அ.சா.1 தனது புகாரில் சொல்லவில்லை என்றால், வழி மறித்ததாக சொல்லவில்லை. அருள்முருகன் மனைவி தகாத வார்த்தையால் திட்டியதாக சொல்லியுள்ளார். என்ன வார்த்தை என்று குறிப்பாக சொல்லவில்லை.

4) முதல் தகவல்அறிக்கை வழிமறித்த குற்றத்திற்காகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வழக்கு பதிவு செய்தபிறகுதான் அ.சா.1யை விசாரணை செய்தேன். எந்த எதிரி யாரை என்ன ஆயிதத்தால் தாக்கினார் என்று அ.சா.1 தனது புகாரில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்ழக்கில் காயம்பட்ட நபர்களாக சொல்லப்படும் பட்டியல் சாட்சி 2 மற்றும் 3யை 30.11.2014 மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். மேற்படி சாட்சிகளின் வாக்குமூலத்தில் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தபோது 30.11.2014 ல் விசாரித்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தனது புகாரில் சொல்லாத சங்கதிகளை எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

5) கண்ணுற்ற சாட்சிகளாக சொல்லப்படும் ஜெகதீசன், பாண்டித்துரை, சம்பவயிடத்திற்கு அருகில் வசிப்பவர்கள் அல்ல என்றால் சரிதான்.

வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ள சம்பவயிட சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்றால் அவர்கள் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. இவ்வழக்கில் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் நடப்பட்டதாக சொல்லப்படும் மரக்கன்று எதுவும் வரைப்படத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் நான் பார்வையிட்டப்போது மரக்கன்றுகள் எதுவும் இல்லை. இவ்வழக்கில் எதிரிகளுக்கு வழக்கு சம்பவத்தில் காயம் ஏற்பட்டது என்றால் எதிரி அருள்முருகனுக்கு மட்டும் காயம் ஏற்பட்டது.

6) எதிரிகளின் காயம் குறித்து சாட்சிகள் யாரும் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட பட்டியல் சாட்சி 2 மற்றும் 3 யை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பிவிட்டுதான் புகார் கொடுப்பதாக அ.சா.1 எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார் கொடுத்துவிட்டு மெடிக்கல் மெமோ பெற்று சிகிச்சையில் சேர்ந்தார் என்றால் சரிதான். அ.சா.1 03.45 மணிக்கு சிகிச்சையில் சேர்ந்தள்ளார். பட்டியல் சாட்சி 2, 3 மாலை 05.07, 05.14 மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்ததாக விபத்து பதிவேட்டில் சொல்லப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி 1 முதல் 3 வாக்குமூலத்தின் படி வழக்கு சம்பவம் மரம் நடுமிடத்தில் தான் சம்பவம் நடந்தது என்றால், சரிதான்.

7) இந்த அ.சா.1 மீது 1வது எதிரி கொடுத்த புகாரில் நான்தான் விசாரணை செய்தேன். அந்த வழக்கு சம்பவமும் மரம் நடும்யிடத்தில் தான் நடந்தது என்றால் சரிதான். புகார்தாரரின் காம்பவுண்ட் சுவார் பாதி இடிந்து இருந்ததாக வரைப்படத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரயையில் பாதி இடிந்திருந்ததாக சொல்லியுள்ளாரா என்றால், பாதி சுவர் இடிந்து தரை மட்டமாகி காலியிடமாக உள்ளது என்று சொல்லியுள்ளார். தங்களுக்கு அரிவாளால் தாக்கி காயம் ஏற்பட்டதாக பட்டியல் சாட்சி 2 மற்றும் 3 எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை சம்பவயிடமாக வாதியின் வீட்டு அருகே என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8) மாதிரி வரைப்படத்தில் சம்பயிடம் மண் பாதை செல்லும் தெருவில் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரச்சணைக்குறிய இடத்தில் அ.சா.1 மரம் நட்டதால் தான் வழக்கு சம்பவம் என்றால் சரிதான் அந்த இடம் யாருக்கு சொந்தமானது என கிராம நிர்வாக அலுவலரை விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. மருத்துவர் ரவிந்திரன், சம்பத், மாரிமுத்து ஆகியோரை நான் தான் விசாரணை செய்தேன். காயம்பட்ட நபர்களுக்கு வெட்டுக்காயம் எதுவும் இல்லை என்றால் ஞாபகமில்லை. அ.சா.1 க் கொடுத்த புகாரும், 1வது எதிரி கொடுத்த புகாரும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் நடந்தது என்றால் சரிதான்.

9) காவல் நிலை ஆணைப்படிதான் வழக்கு விசாரணை செய்யப்படும் என்றால் சரிதான். PSO 588(A) படி எதிர் எதிர் வழக்குகளில் பின்பற்றபடிவேண்டிய நடைமுறையில் நான் இந்த வழக்கில் பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. அந்த நிலையாணைப்படி எதிரிக்கு ஏற்பட்ட காயம்பற்றி இந்த வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். யார் அக்கரமக்காரர்கள் என்பதை நிர்ணயம் செய்யாமல் இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளின் காயம்குறித்த மருத்துவ ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10) இரண்டு வழக்குகளிலும் ஒரே தேதியில் ஒரே யிடத்தில் நடந்துள்ள நிலையில் சம்பவ நேரத்தை மாற்றி குற்ற இறுதி அறிக்கை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகள் அனைவரும் இரண்டு வழக்கு சம்பவங்களும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் நடந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். அ.சா.1 தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவோ, பாதுக்காப்பு வேண்டியோ புகாரில் தெரிவிக்கப்படாத நிலையில் தன்னிச்சையாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றார் சரில்லை. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.